உ

# உயர்வாசற்குன்று முருகன் கோவில்

200A Archway Road N6 5BA

தொலைபேசி இல: 020 8348 9835 தொலைநகல் இல: 020 8482 6508

Website: http://highgatehillmurugan.org

பிரித்தானிய இந்து (சைவ) அறங்காவற் குழுவின் முன்னை நாள் தலைவரும், உயர்வாசற்குன்று முருகன் கோவில் தாபகருமான

அமரர் உயர்திரு சபாபதிப்பிள்ளை ஐயா அவர்களின் ஞாபகார்த்தமாக

# திருவாசக விழா - சமயப் போட்டி

**காலம்: 08.12.2018 சனிக்கிழமைக்கிழமை காலை 9.30 மணி**

**இடம்: ஆலய கல்யாண மண்டபம், உயர்வாசற்குன்று முருகன் கோவில்**

**200A Archway Road, London N6 5BA**

பிரிவு அ. 5 வயதிற்கு உட்பட்டோர்

விரும்பிய தேவாரம் ஒன்று.

ஆ. 5 வயதிற்கு மேல் 7 வயதிற்கு உட்பட்டோர்

விரும்பிய தேவாரம் ஒன்றும் மற்றும் புராணம் ஒன்றும்.

இ. 7 வயதிற்கு மேல் 9 வயதிற்கு உட்பட்டோர்

தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும்வேண்டுவதே இந்த மா நிலத்தே.

திருவாசகம்

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி உண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே..

புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோகமாகுந் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

ஈ. 9 வயதிற்கு மேல் 11 வயதிற்கு உட்பட்டோர்

தேவாரம்

மாதர்ப் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடி(ப்)
போதொடு நீர் சுமந்தேத்தி(ப்) புகுவாரவர் பின் புகுவேன்
யாதுஞ்சுவடு படாமல் ஐயாறடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடுங் களிறுவருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.

## திருவாசகம்

கடையவனேனைக் கருணையினாற்
கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தரகோசமங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத்
தாங்கிக் கொள்ளே.

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றன் உயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

உ. 11 வயதிற்கு மேல் 13 வயதிற்கு உட்பட்டோர்.

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனல் செல்வமல்கு
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடும்
கணபதி யீச்சரம் காமுறவே.

## திருவாசகம்

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்து
என் மனத்திடை மன்னிய மன்னே
சிறை பெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந்துறை யுறை சிவனே
இறைவனே நீ என் உடல் இடம் கொண்டாய்
இனி உன்னை என் இரக்கேனே.

திருவெம்பாவை

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்று
ஓலம்இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

ஊ. 13 வயதிற்கு மேல் 15 வயதிற்கு உட்பட்டோர்.

தேவாரம்

தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டார்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரான் ஆரூரில் அம்மானுக் காளே.

திருவாசகம்

தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றது ஒன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்
திருப்பெருந்துறை யுறை சிவனே
எந்தையே ஈசா உடல் இடம் கொண்டாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே.

## திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்து அயன் தேட
அங்ஙனே பெரிய நீ சிறிய
என்னை ஆள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்
முன்னம் மால் அறியா ஒருவனும் இருவா
முக்கணா நாற்பெருந் தடந் தோள்
கன்னலே தேனே அமுதமே
கங்கை கொண்ட சோளேச்சரத்தானே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்டசுரு திப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டெனும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

ஐந்துபேரறிவம் கண்களே கொள்ள
அளப்பெருங் கரணங்கள் நான்குஞ்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத்துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமா னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

## திருப்புகழ்

அயிலொத் தெழுமிரு விழியாலே
அமுதொத் திடுமரு மொழியாலே
சயிலத் தொழுதுணை முலையாலே
தடையுற் றடியனு மடிவேனோ
கயிலைப் பதியரன் முருகோனே
கடலைக்கரை திரை யருகேசூழ்
மயிலைப் பதிதனில் உறைவோனே
மகிமைக் கடியவர் பெருமாளே.

ஊ. <u>15 வயதிற்கு மேல் 18 வயதிற்கு உட்பட்டோர்.</u>

## தேவாரம்

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோள ரவுசுற்றிக் கடைந் தெழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய
அமரர் கட்கருள் புரிவது கருதி
நீல மார்கடல் விடந்தனை யுண்டு
கண்டத் தேவைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூருளானே.

## திருவாசகம்

அல்லிக் கமலத் தயனு மாலும்
அல்லா தவரு மமரர் கோனுஞ்
சொல்லிப் பரவு நாமத் தானைச்
சொல்லும் பொருளு மிறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறைவின் அமுதை யமுதின் சுவையைப்
புல்விப் புணர்வ தென்று கோலோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

## திருவிசைப்பா

திருமகன் முருகன் தேவிமேல் உமையாள்
திருமகள் மருமகன் தாயாம்
மருமகன் மதனன் மாமனேல் இமவான்
மலையுடை யாரையர் தம் பாவை
தருமலி வளாஞ்சி சிவபுரன் தோழன்
தளபதி சாட்டியக் குடியார்
இருமுகங் கழல்மூன் றேழுகைத் தலமேழ்
இருகையி லிருந்த ஈசனுக்கே.

## திருப்பல்லாண்டு

எந்தை என்தாய் சுற்றம் முற்றும்
எமக்கு அமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன்
சீரடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப் புகுந்தாண்டு கொண்டாருயிர் மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

அண்ணலே எனை ஆண்டு கொண்டருளிய அமுதே!
விண்ணிலே மறைந்தருள்புரி வேதநாயகனே
கண்ணினால் திருக்கயிலையில் இருந்தநின் கோலம்
நண்ணிநான் தொழநயந்து அருள்புரியெனப் பணிந்தார்.

## திருப்புகழ்

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் - என்று பூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள் பதமேதுணைய - தென்று நாளும்
ஏறுமயில் வாகன குகா சரவணா எனது
ஈச என மானமுள - தென்று மோதும்
ஏழைகள் வியாகுலமிதே தென வினாவிலுனை
யேவர் புகழ்வார் மறையு - மென் சொலாதோ
நீறுபடு மாழைபொருமேனியவ வேலை அணி
நீலமயில் வாகவுமை - தந்தவேளே
நீசர் கடமோடெனது தீவினையெலாமடிய
நீடு தனி வேல்விடும் - டங்கல்வேலா
சீறிவர மாறவுண்னாவியுணு மானைமுக
தேவர் துணை வாசிகரி - அண்டசகூடந்
சேரு மழகார் பழனி வாழ்குமரனே பிரம
தேவர் வரதாமுருக - தம்பிரானே.

<u>எ. 18 வயதிற்கு மேல்.</u>

## திருவெம்பாவை

10ல் இருந்து 20 வரை.